IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 144 /2014
Deposition of witness for PW1

Name : லலிதா

Husband Name : சத்தியநாதன்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 15 day of December, 2022.

மனு அனுமதிக்கப்பட்டதின் பேரில் குறுக்கு விசாரணை

1. இவ்வழக்கில் இயேசு, பால்ராஜ் மற்றும் தட்சண்யதாஸ் ஆகியோர் அவர்களுக்கிடையே வாய்மொழியாக பாகம் பிரிவினை செய்துகொண்டதாக வழக்குரை பத்தி 6ல் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வாய்மொழியாக பேசி தாளில் எழுதிக்கொண்டார்கள். அவ்வாறு தாளில் எழுதிக்கொண்டதைப்பற்றி வழக்குரையில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் குறிப்பிட்டுள்ளேன். வா.சா.ஆ10 ஒரு பதிவு செய்யப்படாத பாகப்பிரிவினை பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ10-ஐ எந்த தேதியில், யார் என்னிடம் கொடுத்தது என்றால் என்னுடைய அண்ணன் விஜயன் 24.4.2009 அன்று நான் அவரிடமிருந்து கிரையம் கொடுத்தார்.

2. மேற்படி வா.சா.ஆ10-ஐ வழக்கு தாக்கல் செய்தபோதும், நீதிமன்றத்தில் நான் சாட்சியமளிக்கும்போதும் தாக்கல் செய்யாமல் 2019-ல் தான் நான் என்னை 2வது முறை முதல் விசாரணை செய்தபோது தான் தாக்கல் செய்து குறியீடு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மேற்படி வா.சா.ஆ10-ஐ வழக்கு தாக்கல் செய்யும்போது போட்டேனா என்றால் போட்டுள்ளேன். வா.சா.ஆ10 எந்த வருடம், யாரால் தயார் செய்யப்பட்டது என்ற விவரம் எனக்குநேரிடையாக தெரியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ10 தயார் செய்யப்பட்டது எனக்கு தெரியும் என்று சொன்னால் தற்பொழுது சாட்சி எனக்கு நேரிடையாக தெரியாது என்று கூறுகிறார்.

3. வா.சா.ஆ10-ல் சாட்சி கையொப்பமிட்டவர்களை அழைத்து விசாரித்தால் தான் அந்த ஆவணத்தின் உண்மை தன்மை தெரியவரும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ10-ன் உண்மை தன்மையைப்பற்றி வேறு யாரை விசாரித்தால் தெரியும் என்றால், ஆவணத்தை எழுதி கொடுத்த

பால்ராஜ் இறந்துவிட்டார், அந்த ஆவணத்தை பெற்றவர்களான இயேசு, தட்சண்யதாஸ் ஆவர். அதில் தட்சண்யதாஸ்சும் இறந்துவிட்டார். சாட்சி கையொப்பமிட்ட தங்கவேல் மற்றும் சுப்பிரமணி ஆகியோர் இறந்துவிட்டார்கள். எனவே இயேசு சாட்சியம் அளித்தால் அதன் உண்மை தன்மை தெரியும் ஆனால் அவர் உடல்நிலை சரியில்லாமல் நடக்க இயலாத நிலையில் உள்ளார்.

4. இயேசுவிற்கு உடல்நிலை சரியில்லாமல் உள்ளார் என்பதை காட்ட வாய்மொழி சாட்சியத்தை தவிர ஆவண சாட்சியம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி இயேசு என் அண்ணன் விஜயனுக்கு பொது அதிகாரப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். இயேசு என்பவருக்கும் வழக்கு சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் பொது அதிகாரப்பத்திரம் எழுதி கொடுக்க அவருக்கு அதிகாரம் இல்லை என்றாலும் அவரை அழைத்து சாட்சியாக விசாரித்தால் தான் உண்மை விவரம் தெரியவரும் என்பதால் தான் நான் அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் உள்ளார் என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

5. வா.சா.ஆ10 என்னால் இவ்வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ10ஆவணம் முறையாக பதிவு செய்யப்படவில்லை என்றும் அதற்குரிய தண்டத்தீர்வையை செலுத்ததாதாலும் அந்த ஆவணத்தை சாட்சியமாக ஏற்றுக் கொள்ளக்கூடாது என்றும், நிராகரிக்கத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ11 ஆவணம் மற்றும் வா.சா.ஆ10-ல் உள்ள இயேசுவின் கையொப்பங்கள் மாறுபட்டுள்ளதா என்றால் ஒரே மாதிரியாகத்தான் உள்ளது. இரண்டு கையொப்பங்களும் ஒரே மாதிரியான மையினால் தான் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. வா.சா.ஆ11 பொது அதிகாரப்பத்திரமானது என் அண்ணன் விஜயன் தயார் செய்தார் என்றால் பொய். வா.சா.ஆ11 எழுதிக்கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து சுமார் 15 ஆண்டுகள் கழித்து தான் வா.சா.ஆ12 கிரைய ஆவணம் எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால்

சரிதான். 15 ஆண்டுகளாக பொது அதிகாரம் பெற்றும் ஏன் விற்காமல் என் அண்ணன் விஜயன் இருந்து வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ11 மோசடியாக என் அண்ணன் தயார் செய்ததால் தான் அவர் விற்பனை செய்யாமல் இருந்து வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் மோசடியான ஆவணம் அல்ல அதுப்பற்றி எனக்கு தெரியாது.

7. வா.சா.ஆ12-ஐ நான் இவ்வழக்கு தாக்கல் செய்யும்போதும் முதன்முறை என்னை முதல் விசாரணை செய்துகொள்ளும்போதும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், 2019-ல் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரிதான். வழக்கு சொத்தை நான் கிரையம் பெற்ற பின்பு வழக்கு சொத்தை நான் சென்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். நான் சென்றுபார்த்தபோது பிரதிவாதி ஜார்ஜ் வழக்கு சொத்தில் இருந்துகொண்டு வழக்கு சொத்து அவருக்கு சொந்தமானது என்று கூறினார் என்றால் சரிதான். அந்த விவரம் பிரதிவாதி கூறி எனக்கு தெரிந்த பின்பு எனக்கு விற்ற என் அண்ணன் விஜயனிடம் நான் தெரிவித்தேனா என்றால் அவர் இராணுவத்தில் பணிபுரிந்ததால் அவருக்கு தொலைபேசிமூலம் தெரிவித்தேன். காவல் நிலையத்தில் புகார் அளித்தேன்.

8. நான் சொல்லும் போது 2009ம் ஆண்டு இருக்குமா என்றால் இல்லை. நான் கூறும் காவல்நிலையத்தில் அளித்த புகாரை இவ்வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. 2014-ல் தான் நான் சென்று பார்த்தபோது விவரம் தெரியவந்து என் அண்ணனுக்கும் தெரிவித்து புகார் அளித்தேன் என்றால் சரிதான். 2019-ல் கிரையம் பெற்ற பின்பு வழக்கு சொத்தை சென்று நான் பார்த்தேன் அப்போது பிரதிவாதி வழக்கு சொத்தில் இருந்துகொண்டு என்னை உள்ளே விடாததால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து இதுநாள் வரை பிரதிவாதியின் சுவாதீனத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய அனுபவத்தில் உள்ளது.

9. வழக்கு சொத்தின் அனுபவத்தில் நான் இருந்து வரவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ12-ஐ நானும், என் அண்ணனும் மோசடியாக தயார் செய்ததால் தான் முதல்முறை

என்னை முதல்விசாரணை செய்துகொள்ளும்போது தாக்கல் செய்யவில்லை என்றால' சரியல்ல. வழக்கு சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், இதுநாள்வரை பிரதிவாதியின் பெயரில் தான் பட்டா இருந்து வருகிறது என்றும், நான் கூறியபடி இயேசுவிற்கு வழக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றும், நானும் என் அண்ணனும் சேர்ந்து வா.சா.ஆ10,11 மற்றும் 12 மோசடியாக தயார் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தை நான் கிரையம் பெறும்போதே பிரதிவாதி ஜார்ஜ், அவர் தம்பிகள் ஜான்சன் மற்றும் மோசஸ் ஆகியோர் பெயரில் பட்டா வழங்கப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

10. நான் இவ்வழக்கில் விளம்புகை பரிகாரம் கோரமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரியுள்ளபடியால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. உரிய நீதிமன்ற கட்டணத்தை நீதிமன்றத்தில் செலுத்தாமல் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கான வழக்குமூலமே ஏற்படவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி வழக்கு சொத்தில் இருந்துவரும் நிலையில் பிரதிவாதியிடமிருந்து சுவாதீனம் கோரமல் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

K VENKATESAN Digitally signed by K VENKATESAN

DISTRICT MUNSIF

KATPADI.